IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

SC No.131/2024

dated : 18.09.2024

P.W. 59-சங்கர்

A5, A18 எதிரிகள் இறந்துவிட்டனர். A3,A7, A12, A15, A16 and A17 எதிரிகள் ஆஜர் இல்லை. மற்ற எதிரிகள் ஆஜர். கு.விமு.ச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

**சாட்சி மீண்டும் திரும்ப அழைக்கப்பட்டு வீடியோ பதிவுகள் திறந்த நீதிமன்றத்தில் காட்டப்பட்டு அதன்பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.:**
**குறுக்குவிசாரணை 14 மற்றும் 17 எதிரிகள் தரப்பில்**

காயம்பட்டவர் தென்வடல் சாலையில் மேற்கு பகுதியில் கிடப்பதாக வீடியோவில் காணப்படுகிறது என்றால் சரிதான். வாகனங்கள் ரோட்டின் கிழக்கே உள்ளது என்றால் சரிதான். முன்னதாக ஒரு யுனோவா வாகனமும், அதற்கடுத்து ஸ்கார்பியோ வாகனமும் உள்ளது என்றால் சரிதான். அந்த வாகனங்கள் மூன்றும் யார். யாருடையது என்று என்னால் குறிப்பாக கூறமுடியாது. காயம்பட்டவரை கடந்து வடக்கே வாகனங்கள் வரிசையாக நிற்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். காயம்பட்டவரின் திசையில் இருந்து வடக்கு நோக்கி மேற்காக ஒரு காவல் வாகனம் காணப்படுகிறது என்றால் சரிதான். ஆற்றுக்கு செல்லும் பாதைக்கு வடக்கு நோக்கி அந்த வாகனம் நிற்கிறது என்றால் சரிதான். வீடியோவில் காணப்படும் மற்றொரு காவல் வாகனத்தில் அமர்ந்திருக்கும் 2 நபர்கள் பட்டியல் சாட்சி 22,23 ஆவர். அவர்கள் காயம்பட்டவர் சம்பவத்திற்கு முன்பு பயணித்த 2 சக்கர வாகனத்தை பின்தொடர்ந்த நபர்கள் என்றால் சரிதான். மேற்கண்ட இருவரும் கண்ணுற்ற சாட்சியாக குறிப்பிடப்பட்டுள்ளனர். மேற்கண்ட இருவரும் சம்பவத்தை கண்ணுற்ற சம்பவ இடத்தில் அப்போதே கிடைத்த சாட்சிகள் என்றால் சரிதான் நான் அவர்களை அன்றையதினம் விசாரிக்கவில்லை. சம்பவத்தில் ஈடுபட்ட நபர்கள் வேறு ஏதோ நபர்கள் என்பதால் தான் பட்டியல் சாட்சிகள் 22,23-ஐ மறுநாள் விசாரித்ததாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எங்கள் மேல் அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு வந்துவிட்டார்கள். ஆனால் எத்தனை மணிக்கு வந்தார்கள் என்று என்னால் கூற இயலாது. அவர்கள் பட்டியல் சாட்சிகள் 22,23 ஐ விசாரித்தார்களா என்று எனக்குத் தெரியாது. மேற்படி பட்டியல் சாட்சிகள் 22,23 காவல் வாகனத்தில் அமர்ந்திருக்கும்

அதே நேரத்தில் சம்பவ இடத்தின் அருகில் மாவட்ட ஆட்சித் தலைவரும், அமைச்சர்கள் இருவரும் இருப்பதை காணமுடிகிறது என்றால் சரிதான். அதே வீடியோவில் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்த பெண் உதவி ஆய்வாளர் காணப்படுகிறார் என்றால் சரிதான். அதனையடுத்த காட்சிகளில் தான் காணப்படுகிறார். சம்பவ இடத்தின் அருகில் கிடக்கும் ஆயுதத்தை அதே பெண் உதவி ஆய்வாளர் மற்றும் ஒரு காவலரும், அமைச்சரும் இருப்பதாக வீடியோ பதிவில் காணப்படுகிறது என்றால் சரிதான். காவல் வாகனத்தில் இருந்து இறங்கி நிற்கும் நபர் நான் தான். நான் இறங்கி மாவட்ட ஆட்சி தலைவரிடம் பேசும் காட்சி பதிவாகியுள்ளது என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு வழக்கு பதியும் முன்னராகவே நானும், உதவி ஆய்வாளரும் சென்ற விவரங்கள் எதுவும் சாட்சிகளின் வாக்குமூலத்தில் துலங்காது என்றால் சரிதான். மாவட்ட ஆட்சித் தலைவரிடம் நான் பேசினேன் என்பதும் சாட்சிகளின் வாக்குமூலங்களில் துலங்காது என்றால் சரிதான். மாவட்ட ஆட்சித் தலைவரும் ஒரு கண்ணுற்ற சாட்சி என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு காவல் வாகனத்தில் வந்து இறங்கியவுடன் நான் மாவட்ட ஆட்சி தலைவரிடம் தான் முதலில் பேசினேன். காணொலியில் கைத்துப்பாக்கியுடன் காணப்படும் மற்றொரு காவலர் இவ்வழக்கின் புகார்தாரரான உதவி ஆய்வாளர் மணி ஆவார். காணொலியில் காணப்படும் மற்றொரு காவல் துறை அலுவலர் துணை கண்காணிப்பாளர் கோபால் என்பவர் ஆவார். புகாரை பதிவு செய்த பெண் உதவி ஆய்வாளரும், அமைச்சர்களும் காணப்படுகிறார்கள் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் கிடந்த தடயங்களை 2 நபர்கள் சேகரிப்பதாக காணொலியில் காணப்படுகிறது என்றால் சரிதான் அவர்கள் 108 ஆம்புலன்சில் வந்த நபர்கள் என்று சாட்சி தாமாக கூறுகிறார். 108 ஆம்புலன்ஸ் சம்பவ இடத்திற்கு வந்ததாக நான் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்துள்ள வாக்குமூலங்களில் இல்லை என்றால் சரிதான் நான் அவர்களை அது சம்மந்தமாக விசாரித்தேன் என்று சாட்சி தாமாக கூறுகிறார். ஆற்றுப் பகுதியில் இருந்து சம்பவ இடத்திற்கு திரும்பி வரும் ஆயுதப்படை உதவி ஆய்வாளரும், அவருக்கு பின்னால் வரும் காவலர்கள் நிதானமாக நடந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. காணொலியில் உதவி ஆய்வாளரைத் தொடர்ந்து பின்னால் நடந்து வரும் 2 காவலரும் கண்ணுற்ற சாட்சிகள் தான். அதில் ஒருவர் கையில் கார்பைல் எனப்படும் ஆயுதமும், மற்றொருவர் எஸ்எல்ஆர் எனப்படும் ஆயுதத்தையும் வைத்துள்ளார்.

அவர்கள் இருவரும் பால்ராஜ் மற்றும் ஸ்டீபன் ஆவர். தேடிச்சென்ற காவலர்கள் திரும்பி வந்த பின்னர் மாவட்ட ஆட்சியரிடம் பேசிக்கொண்டிருக்கும் காட்சிகள் காணப்படுகிறது என்றால் சரிதான். கண்ணுற்ற சாட்சிகளான மணி , செந்தில், பாலமுருகன் ஆகியோர் துணை கண்காணிப்பாளருடன் பேசிக்கொண்டிருக்கும் காட்சி காணப்படுகிறது. ஆற்றின் நடுவே செல்லும் தரைபாலத்தில் காணப்படும் வாகனம் நான் பயணித்த வாகனம் ஆகும். காணொலியில் காணப்படும் மேற்கண்ட காட்சி நான் எதிரிகளைத் தேடிச்செல்லும் போது பதிவான காட்சி ஆகும். எதிரிகளைத் தேடிச்சென்ற காவலர்களை நான் நிறுத்தி விசாரிக்கவில்லை. காணொலியில் காணப்படும் அலுவலர்கள் மாவட்ட கண்காணிப்பாளர் திரு.அஸ்ராகார்க் மற்றும் டிஐஜி கண்ணப்பன் என்றால் சரிதான். வீடியோ பதிவு செய்யப்பட்ட நேரம் காணப்படவில்லை என்றும் பதிவு செய்யப்பட்ட நேரம் தெரிந்தால் அது அரசு தரப்பு வழக்கை பாதிக்கும் என்பதால் வேண்டுமென்றே அந்த பதிவுகளை அழித்துவிட்டோம் என்றால் சரியல்ல. வீடியோ பதிவுகளில் கண்ட சங்கதிகளை மறைத்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளோம் என்றால் சரியல்ல. எங்கள் காவல்துறை உயர் அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு வந்த பின்னர் தான் பின் யோசனையுடன் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அ.சா.1 பணிமுடிந்து மதுரைக்கு சென்ற பின்னர் அவரை மட்டும் திரும்ப அழைத்து பின்னிட்டு புகார் பெறப்பட்டது என்றும் அதனால் தான் அவருடன் பணிபுரிந்த மற்ற காவலர்களை புகாரில் கையொப்பம் பெறாமல் எங்களால் வாங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பட்டியல் சாட்சி 22,23 ஆகியோரை கொண்டு அடையாள அணிவகுப்பு நடத்தியிருந்தால் சம்பவத்தில் ஈடுபட்ட உண்மை குற்றவாளிகளை கண்டறிந்திருக்க இயலும் என்றும் வேண்டுமென்ற அத்தகைய நடவடிக்கையை நான் மேற்கொள்ளவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. பாதுகாப்பிற்கு சென்ற வாகனங்களில் முதலில் பிஆர்ஓ (செய்தி தொடர்பு) வாகனம் சென்றது என்றும் பின்னிட்டு அந்த வரிசையை மாற்றி மாவட்ட ஆட்சி தலைவர் வாகனம் முன்னால் சென்றதாக எங்கள் வழக்கிற்கு ஏற்ப சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பாதுகாப்பு வரிசையில் முதலில் சென்ற வாகன ஓட்டுநர் மற்றும் அதில் பயணித்தவர்களை கொண்டு அடையாள அணிவகுப்பு நடத்தவில்லை என்றால் சரிதான். நான் எங்கள் காவல் உயர் அதிகாரிகளின் உத்தரவு படி அவர்கள்

கூறிய வழிமுறைகளுக்கு ஏற்ப தவறான ஆவணங்களை உற்பத்தி செய்து பொய்யான குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய விசாரணை ஒரு தலைப்பட்சமானது என்றும் எதிரிகளுக்கும் வழக்கிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.

**<u>1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

எனக்கு எலக்ட்ரானிக் சாட்சியங்களை எந்த முறையில் புலன் விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்று தெரியும். வீடியோ மற்றும் புகைப்படம் என இரண்டு பதிவுகள் உள்ளது. வீடியோவில் காட்சி பதிவும், ஒலிப்பதிவும் இருக்கும் என்றால் சரிதான். பொதுவாக அவ்வாறு பதிவு செய்யப்படும் வீடியோ மற்றும் ஆடியோ பதிவுகளில் இடைஞ்செறுகல், புதிய பதிவுகள் மற்றும் ஏற்கனவே இருக்கும் பதிவுகளை நீக்குதல், ஒட்டுதல் செய்ய முடியும் என்றால் இயலும். அது போன்ற இடைஞ்செறுகல் மற்றும் நீக்குதல் போன்றவற்றை எவ்வாறு ஆய்வு செய்ய வேண்டும் என்று எனக்கு தெரியும். எலக்ட்ரானிக் குற்றங்களை புலன் ஆய்வு செய்ய தனியே புலனாய்வு அமைப்பு உள்ளது என்றால் தற்போது உள்ளது. நான் கூறுவது தவறு என்றும், அந்த சட்டம் இயற்றப்பட்ட காலம் முதலே அத்தகைய அமைப்பு உள்ளது என்றும் சம்பவ காலத்தில் இல்லை என்று நான் வழக்கிற்காக கூறுகிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கு சம்பந்தமாக என்னிடம் வீடியோ சிடி தான் என்னிடம் ஒப்படைக்கப்பட்டது. அவ்வாறு குறுந்தகடை பெறும்போது அதற்கான மகசர் எதுவும் தயாரித்து பெற்றுக் கொள்ளவில்லை. அந்த குறுந்தகடு எந்த எலக்ட்ரானிக் மூலத்தில் இருந்து நகல் எடுக்கப்பட்டது என்று எனது விசாரணையில் தெரியவந்தது. அது முந்தைய வீடியோ கேசட் மூலம் பதிவு செய்யும், வீடியோ கேமரா மூலம் பதிவு செய்யப்பட்ட மூலத்திலிருந்து குறுந்தகடாக பெறப்பட்டது. அந்த வீடியோ கேமராவை நான் பார்த்தேன். அந்த கேமராவில் பதிவு செய்யப்படும் காட்சிகள் கேசட், மெமரி கார்டு, மற்றும் சிப் ஆகிய எந்த மூலத்தில் சேமிப்பில் சேமிக்கப்படும் என்பததை நான் பார்த்தேனா என்றால் பார்த்தேன். அது ரிக்கார்டிங் கேசட் ஆகும். நான் வீடியோ கேசட்டை கைப்பற்றவில்லை. அந்த வீடியோ கேசட்டிலிருந்து கம்புயூட்டரில் சேமிக்கப்பட்டு, அதிலிருந்து குறுந்தகடாக என்னிடம் ஒப்படைக்கப்பட்டது. அந்த வீடியோ பதிவை மேற்கொண்ட நபரை விசாரித்தேன், அவர் வாக்குமூலமாக தரவிருப்பமில்லை என்று கூறிவிட்டார். அவர் பெயர் பரமசிவம், அவர் வசந்த் டிவி

ரிப்போர்ட்டர் ஆவார். அந்த கேமராவை நான் பார்த்தேன். அதன் தயாரிப்பு நிறுவனம், அதன் அடையாள எண் ஆகியவற்றை பார்த்தேன். ஒரு எலக்ட்ரானிக் பொருளின் Hash value என்னவென்று எனக்கு தெரியும். பொதுவாக ஒரு எலக்ட்ரானிக் பொருள் கைப்பற்றி நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கும்போது அதற்கான Hash value விபரங்களுடன் சமர்ப்பிமோம் என்றால் தற்போது அவ்வாறு செய்கிறோம். சம்பவ காலத்தில் நான் அவ்வாறு ஏதும் செய்யவில்லை. ஏனென்றால் அதுப்பற்றி தெளிவான உத்திரவுகள் இல்லை. வட்டார தடய அறிவியல் ஆய்வகம் உள்ளது என்றால் சரிதான். அதில் எலக்ட்ரானிக் சாட்சியங்களை ஆய்வு செய்ய தனிப்பிரிவு உள்ளது என்றால் சரிதான். அவர்கள் மூலம் மட்டுமே ஒரு வீடியோ பதிவில் வீடியோ மற்றும் ஆடியோ இடைச்செறுகல் நீக்குதல், வெட்டுதல், ஒட்டுதல் உள்ளதா , இல்லையா என்று காண முடியும் என்றால் சரிதான். இன்றைய வீடியோ காட்சிகளை தடய அறிவயில் ஆய்வகத்திற்கு அனுப்பி அதில் ஏதேனும் இடைச்செறுகல் நீக்குதல், வெட்டுதல், ஒட்டுதல் உள்ளதா என்று காணமுடியும் என்றால் சரிதான். நான் கைப்பற்றிய குறுந்தகடு பதிவுகளில் இடைச்செறுகல் நீக்குதல், வெட்டுதல், ஒட்டுதல் உள்ளதா என்று பரிசோதிக்க தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி அந்த பதிவை உறுதி செய்துகொள்ள மேற்க்கொள்ளவில்லை என்றால் சரிதான். அ.சா.2 ல் உள்ள பதிவுகள் ஒரே கேமரா அல்லது பல கேமராவில் எடுக்கப்பட்டதா என்றால் பல கேமராவில் எடுக்கப்பட்ட பதிவுகள் என்று பரமசிவன் மூலம் தெரிந்து கொண்டேன். அந்த கேமராக்கள் அனைத்தும நான் பார்க்கவில்லை. ஒவ்வொரு பதிவும் எந்தெந்த கேமராவில் பதிவு செய்யப்பட்டது என்று குறிப்பாக தெரியாது. ஒவ்வொரு கேமராவும் எந்த தயாரிப்பு மற்றம் அடையாள எண் என்ன என்று குறிப்பாக தெரியாது. வசந்த் டிவி என்ற தொலைக்காட்சி நிறுவனம் அவர்களது உள்ளரங்கில் தொடர் தயாரிக்கும் நிறுவனம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அ.சா.ஆ 2 ஆவணத்தில் உள்ள பதிவுகள் வசந்த் டிவி நிறுவனத்தில் ஸ்டியோவில் தயாரிக்கப்பட்டு, மீண்டும் வழங்கப்பட்ட பதிவுகள் என்றால் பரமசிவன் என்னிடம் கூறியபோது அவருடைய நண்பர்கள் பலரும் கொடுத்த பதிவுகளை ஒரே கம்புயூட்டரில் பதிவு செய்து அதை குறுந்தகடாக எனக்கு வழங்கியதாக கூறினார்கள். வீடியோவை பதிவு செய்யும் நபரை பொறுத்து அதை பதிவு செய்யும் நேரம் அதில் குறிப்பிடப்படுவதற்கு வாய்ப்பு உள்ளது. வீடியோ

எடுக்கும் நபர் நேரத்தை பதிவு செய்வதும், பதிவு செய்யாததும் அவர் விருப்பத்தை பொறுத்து. அ.சா.ஆ-2 ஆவணத்தில் வீடியோ பதிவுகளில் நேரம் குறிப்பிடப்படவில்லை. அ.சா.ஆ.2-ல் எந்தெந்த குறிப்பிட்ட பகுதி, எந்தெந்த கேமராவில் பதிவு செய்யப்பட்டது என்று அதில் தனி அடையாளம் காணும் பொருட்டு பதிவுகள் இல்லை என்றால் சரிதான். அமைச்சரின் நிகழ்ச்சி நிரலை பதிவு செய்வதற்காக மேற்கண்ட வீடியோ பதிவு செய்த நபர் திருநெல்வேலிருந்து அமைச்சரை பின்தொடர்ந்து உள்ளார். எனக்கு வழங்கப்பட்ட குறுந்தகடு சம்பவம் தொடர்பான விபரங்களை தவிர முந்தைய பதிவுகளை வழங்கப்படவில்லை. காயம் அடைந்தவர் சாலையில் காயத்துடன் துடித்து கிடக்கும் காட்சியிலிருந்து காணொலி துவங்குகிறது என்றால் சரிதான். அந்த காணொலி காயம்பட்டவரை வாகனத்தில் ஏற்றி அனுப்பும் வரை 4 நிமிடம் 56 நொடிகள் வரை பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்த காணொலி மொத்தம் 22 நிமிடமும் 57 நொடிகளும் கொண்டதாக உள்ளது. 4 நிமிடம் 56 நொடிகள் கடந்தபின்னர் மீதி பதிவுகள் உள்ளது. அந்த 18 நிமிட பதிவுகளிலும் கடைசியில் காயம்பட்டவர் சம்பவ இடத்தில் இருப்பதாக காணப்படுகிறது. அதில் அவர் எழுவதை போலவும், தண்ணீர் குடிப்பதை போலவும் காணப்படுகிறது. 18.01.2010 அன்று குறுந்தகடு பெறப்பட்டது. சா.பொ.37 முதல் 40 புகைப்படங்கள் சம்பவ இடத்திலும், பிரேத விசாரணையின்போதும் எடுக்கப்பட்டவை ஆகும். பிரேத விசாரணையின்போது எடுக்கப்பட்ட புகைப்படங்கள் ஒரு வரிசையாகவும், சம்பவ இடத்தில் எடுக்கப்பட்ட மற்றொரு வரிசையாகவும், இன்று என்னால் அடையாளப்படுத்தப்படுகிறது. அதில் சம்பவ இடத்தில் எடுத்தாக கூறப்படும் புகைப்படங்களில் காயப்பட்டவரின் உருவம் காணப்படவில்லை என்றால் சரிதான். அதை ஏ, பி என்று வரிசைப்படுத்துகிறேன். புகைப்படங்கள் பிரேத விசாரணைக்கு முன்பு, பின்பு எடுக்கப்பட்டதா என்றால் பிரேத விசாரணையின்போது எடுக்கப்பட்டது. புகைப்படங்கள் என்னுடைய அறிவுரையின்படி எடுக்கப்பட்ட புகைப்படங்கள் ஆகும். நான் கூறுவதுபோல் எனது அறிவுரையின்படி எடுக்கப்படவில்லை என்றும், அ.சா 48 மேற்கண்ட புகைப்படங்களை எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. புகைப்படங்கள் அனைத்தும் புகைப்பட நிபுணர் ஹரி மோகன் என்பரால் பின்னிட்டு எங்கள் வசதிக்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட புகைப்படங்கள் என்றால் சரியல்ல. காயம்பட்டவர் வலதுகால் முழுவதும் துண்டிக்கப்பட்டு, தனியாக இருந்த விபரங்கள்

மறைக்கப்பட்டு, புகைப்படங்கள் தயாரிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதேபோலவே இறந்தவரின் தொடர்பான காட்சிகள் பின்னிட்டு இடைச்செறுகலாக சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதனால்தான் மேற்கண்ட குறுந்தகடை தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி அதன் உண்மை தன்மையை நான் உறுதிசெய்து கொள்ளவில்லை என்றால் சரியல்ல. இறந்த சார்பதிவாளர் வெற்றிவேல் கடனா ஆற்றுபாலம் ரோட்டின் அருகில் நின்றுகொண்டிருந்த இரண்டு நபர்களை பார்த்து வண்டியை நிறுத்தி, விசாரித்து அனுப்பி வைத்தார்கள் என்று சாட்சி சங்கரபெருமாள், அம்பிகாவதி ஆகியோர் வாக்குமூலத்தில் சொல்லப்பட்ட இரண்டு நபர்கள் யார் என்று எனது புலனாய்வில் துலங்காது. எனது விசாரணையில் மேற்கண்ட இரண்டு நபர்கள் யார் என்று தெரியவந்தது என்றும், வேண்டுமென்று இவ்வழக்கிற்காக நான் மறைத்துள்ளேன் என்றால் சரியல்ல. அ.சா.ஆ.2, 3 பதிவுகள் வழக்கிற்காக எங்களது வசதிக்கு ஏற்ப பின்னிட்டு இடைஞ்செறுகளுடன், வெட்டி, ஒட்டி தயாரிக்கப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் அமைச்சர்கள், அரசியல்வாதிகள் தொடர்பு இருப்பதால் அவர்களை காப்பற்ற வேண்டும் என்ற நோக்கத்துடன், உண்மையான குற்றவாளிகளை மறைத்தும், முதலில் கிடைத்த தகவலை மறைத்தும், இந்த எதிரிகளை பலிகடாஆக்கி, அதற்கு ஏற்ப சாட்சியங்களையும், ஆவணங்களை உற்பத்தி செய்து பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

***மேற்கண்ட குறுக்கு விசாரணையை மற்ற எதிரிகள் தரப்பில் தமதாக ஏற்றுக்கொள்வதாக கூறப்பட்டு, பதிவு செய்யப்பட்டது.***

**<u>மறு விசாரணை</u> :**

**குற்றப்பத்திரிக்கையில் குறிப்பிட்ட கண்ணுற்ற சாட்சிகள் அனைவரும் இன்றைய காணொலி பதிவுகளில் காணப்படுகின்றன. காணொலியில் காயம்பட்ட வெற்றிவேல் உருயிருக்கு போராடிய நிலையில் எடுத்து செல்லப்படுவதாக காணொலியில் காணப்படுகிறது.**

**<u>மீண்டும் குறுக்கு விசாரணை</u> : இல்லை**